பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

23 06 2024 6 45

ஞாயிற்றுக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. முதுகலை மருத்துவப் பட்டப் படிப்பு மாணவர் சேர்க்கைக்கு இன்று நடைபெறுவதாக இருந்த நீட் நுழைவுத் தேர்வு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

2. உயர்தொழில்நுட்ப சாகுபடியை ஊக்குவித்து வேளாண் உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தமிழக அரசு தெரிவித்துள்ளது.

3. பால் உற்பத்தி செலவைக் குறைத்து அதன் தரத்தை அதிகரிக்கப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று பால்வளத்துறை அமைச்சர் திரு. மனோ தங்கராஜ் தெரிவித்துள்ளார்.

4. கள்ளக்குறிச்சியில் கள்ளச்சாராயம் அருந்திய சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 55ஆக அதிகரித்துள்ளது.

5. பிரிக்ஸ் விளையாட்டுப் போட்டிகளில் குத்துச்சண்டைப் பிரிவில் இந்தியா 2 தங்கப் பதக்கங்களை வென்றுள்ளது.

*<u>--- இனி விரிவான செய்திகள் ----</u>*

<<<<>>>>

முதுகலை மருத்துவப் பட்டப் படிப்பு மாணவர் சேர்க்கைக்கு இன்று நடைபெறுவதாக இருந்த நீட் நுழைவுத் தேர்வு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அண்மையில் சில போட்டித் தேர்வுகள் தொடர்பாக புகார்கள் எழுந்ததை கருத்தில் கொண்டு இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டதாக மத்திய சுகாதார அமைச்சகம் கூறியுள்ளது.

இது தொடர்பாக அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இத்தேர்வுக்கான புதிய தேதி விரைவில் அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீட் நுழைவுத்தேர்வு தொடர்பான நடைமுறைகளை முழுமையாக மதிப்பீடு செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாணவர்களின் நலன் கருதியும், தேர்வு நடைமுறைகளில் நேர்மையை கடைபிடிக்கும் வகையில் இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டதாக சுகாதாரத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

மக்களவை கூட்டத்தொடர் நாளை தொடங்குகிறது.

புதிய உறுப்பினர்களுக்கு இடைக்கால மக்களவைத் தலைவர் திரு. திரு. Bhartruhari Mahtab பதவிப் பிரமாணம் செய்து வைக்கிறார்.

மாநிலங்களவை கூட்டத்தொடர் வரும் வியாழக்கிழமை தொடங்குகிறது.

நாடாளுமன்ற கூட்டுக் கூட்டத்தில் குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு வரும் 27ஆம் தேதி உரையாற்றுகிறார்.

மக்களவைத் தலைவர் தேர்தல் வரும் 26ஆம் தேதி நடைபெற உள்ளது.

இந்த கூட்டத்தொடர் அடுத்த மாதம் 3ஆம் தேதிவரை நடைபெறும்.

<<<<>>>>

சரக்கு மற்றும் சேவை வரி குழுமத்தின் 53வது கூட்டம் மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தலைமையில் புதுதில்லியில் நேற்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பல்வேறு பரிந்துரைகளை ஜி.எஸ்.டி. கவுன்சில்

முன்வைத்துள்ளது.

இதில் வரி செலுத்துவோரின் வட்டி சுமையை குறைப்பது, அனைத்து விதமான பால் கேன்கள், அனைத்து சூரிய சக்தி குக்கர்களுக்கு 12 சதவீத வரி விதிக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

சாமானிய மக்கள் பயனடையும் வகையில் ரயில்வே வழங்கும் சில சேவைகள் மற்றும் மாணவர் விடுதிகள் ஆகியவற்றுக்கு வரி விலக்கு அளிக்க கவுன்சில் பரிந்துரை செய்துள்ளது.

பாதுகாப்பு படைகளுக்கான குறிப்பிட்ட தளவாட இறக்குமதிக்கான ஜி.எஸ்.டி. வரிவிலக்கு மேலும் 5 ஆண்டுகளுக்கு நீட்டிக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

2017-18 நிதியாண்டு முதல் 2019-20ஆம் நிதியாண்டு வரையிலான 3 ஆண்டுகளுக்கு ஜி.எஸ்.டி. சட்டத்தின்கீழ் விதிக்கப்பட்ட வட்டி மற்றும் அபராதங்களை தள்ளுபடி செய்யவும் ஜி.எஸ்.டி. கவுன்சில் பரிந்துரைத்துள்ளது.

<<<<>>>>

நாட்டின் ஜனநாயக நடைமுறைகள் வலுவடைந்து வருவதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

லக்னோவில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு பேசிய அவர், வலிமையான ஜனநாயக நடைமுறைகள் மூலம் இந்தியா உலக அளவில் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளதாக குறிப்பிட்டார்.

நாட்டு மக்களின் மனநிலை மற்றும் பொருளாதார வளர்ச்சி கடந்த 10 ஆண்டுகளில் மாற்றம் கண்டு வருவதாக அவர் கூறினார்.

மத்திய அரசு செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்கள் மற்றும் கொள்கைகளை சுட்டிக்காட்டிய அவர், சர்வதேச அளவில் இந்தியா மீதான உலக நாடுகளின் நம்பிக்கை அதிகரித்து வருவதாக திரு. ராஜ்நாத் சிங் கூறினார்.

<<<<>>>>

பாதுகாப்புத் துறையில் அடுத்த தலைமுறைக்கான நவீன தொழில்நுட்பங்களைக் கொண்டு வரும் வகையில் மத்திய அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக ராணுவ தொலைதொடர்பு கல்லூரி, இந்திய ராணுவம் மற்றும் நுண் அலை மின்னணு பொறியியல் மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது.

இதன்மூலம் இந்திய ராணுவத்தின் தொழில்நுட்பத் திறன் குறிப்பிடத்தக்க அளவில் வலுவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

<<<<>>>>

தேசிய தேர்வு முகமையின் கீழ் நடத்தப்படும் தேர்வுகளில் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்யும் வகையில் பரிந்துரைகளை வழங்குவதற்காக அமைக்கப்பட்ட உயர்நிலைக் குழுவிற்கு பல்கலைக்கழக மானியக் குழு வரவேற்பு தெரிவித்துள்ளது.

பல்கலைக்கழ மானியக் குழுவின் தலைவர் திரு. **Mamidala Jagadeesh Kumar** சமூக வலைதளத்தில் இதனைப் பதிவிட்டுள்ளார்.

தேர்வு தொடர்பான நடைமுறைகள், தரவு பாதுகாப்பை மேம்படுத்துதல், தேசிய தேர்வு முகமையின் வடிவமைப்பு மற்றும் செயல்பாடுகளை மேம்படுத்துவதன் மூலம் தேர்வு நடைமுறைகளை வலுப்படுத்த முடியும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

தமிழகத்தில் பல்வேறு விதமான போதைப்பொருள் புழக்கத்தை கட்டுப்படுத்த மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாநில பிஜேபி தலைவர் திரு. அண்ணாமலை வலியுறுத்தியுள்ளார்.

கள்ளக்குறிச்சி சம்பவத்திற்கு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் பொறுப்பேற்று பதவி விலக வேண்டும் என்பதை வலியுறுத்தி கோவையில் பிஜேபி சார்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார்.

அமைதியான முறையில் போராட்டம் நடத்துவதற்கு பிஜேபி சார்பில் முறையாக அனுமதி கேட்டும், காவல்துறை அனுமதி வழங்கவில்லை என்று அவர் கூறினார்.

கள்ளக்குறிச்சி சம்பவம் குறித்து உள்துறை அமைச்சருக்கு கடிதம் எழுதியுள்ளதாகவும், சிபிஐ விசாரணை நடந்தால் மட்டுமே உண்மை நிலவரம் தெரியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கள்ளச்சாராயத்தை கட்டுப்படுத்த உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமே தவிர, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணம் அளிப்பது அதற்கு தீர்வாகாது என்று திரு. அண்ணாமலை கூறினார்.

<<<<>>>>

பால் உற்பத்தி செலவைக் குறைத்து அதன் தரத்தை அதிகரிக்கப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று பால்வளத்துறை அமைச்சர் திரு. மனோ தங்கராஜ் தெரிவித்துள்ளார்.

கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

பசுந்தீவன பற்றாக்குறையைக் கருத்தில்கொண்டு பால் உற்பத்தியாளர்களுக்கு ஒரு கோடி ரூபாய் செலவில் பசுந்தீவன புல் கரணைகள் வழங்கப்படும் என்று அவர் கூறியுள்ளார்.

பால் உற்த்தியாளர்களின் கால்நடைகளுக்குத் தேவையான ஊட்டச்சத்து டானிக் கூட்டுறவு சங்கங்கள் மூலம் நியாயமான முறையில் விற்பனை செய்யப்படும் என்று அதில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கால்நடை மருத்துவர்கள், விரிவாக்க அலுவலர்கள், கிராமநல ஊழியர்கள் என மூவாயிரம் பணியாளர்களுக்கு பாரம்பரிய கால்நடை மூலிகை மருத்துவப் பயிற்சிகள் வழங்கப்படும் என்று அமைச்சர் திரு. மனோ தங்கராஜ் கூறினார்.

<<<<>>>>

உயர்தொழில்நுட்ப சாகுபடியை ஊக்குவித்து வேளாண் உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று வேளாண்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் நேற்று நடைபெற்ற வேளாண்துறைக்கான மானியக் கோரிக்கை விவாதத்தின்போது மக்களாசோள சாகுபடியை ஊக்குவிப்பதற்கான சிறப்புத் திட்டம் 18 மாவட்டங்களில் 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும் என்று கூறினார்.

விளைபொருட்களை பாதுகாக்க 10 கோடி ரூபாய் செலவில் விற்பனைக் கூடம் அமைக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

கோடை காலத்தில் காய்கறி விலையைக் கட்டுப்படுத்தும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அவர் தெரிவித்தார்.

டெல்டா மாவட்டங்களில் வறட்சி காலங்களில் பாசன தேவையை கருத்தில் கொண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட குளங்களை தூர்வாரி மேம்படுத்தப்படும் என்று அவர் தெரிவித்தார்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் 4 அரசு தோட்டக்கலைப் பண்ணைகளின் கட்டமைப்பு வசதிகள் 25 லட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும் என்று அவர் கூறினார்.

வேளாண் கட்டமைப்பு நிதித் திட்டத்தில் கடன் பெற்று தொழில் தொடங்க ஆர்வமுள்ள விவசாயிகளுக்கு இலவச திட்ட அறிக்கை தயாரித்து வங்கிக் கடன் பெற வழிவகை செய்யப்படும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

<<<<>>>>

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி ராஜகோபாலசுவாமி திருக்கோவில் தெப்பத் திருவிழா நேற்று வெகு விமரிசையாக நடைபெற்றது.

ஆசியாவின் மிகப்பெரிய தெப்பக்குளமான ஹரித்ரா நதி தெப்பக் குளத்தின் முக்கிய நிகழ்வான தெப்பத் திருவிழா நேற்று நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

கள்ளக்குறிச்சியில் விஷச்சாராயம் அருந்திய சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 55ஆக அதிகரித்துள்ளது.

இச்சம்பவத்தில் பல்வேறு மாவட்ட மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வரும் நிலையில் அவர்களின் உடல்நிலையை தொடர்ந்து கண்காணிக்கப்பட வேண்டும் என்று மாநில சுகாதாரத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்த விவகாரத்தில் அஇஅதிமுக சட்டப்பேரவை உறுப்பினர்கள் சட்டப்பேரவையில் தங்களது எதிர்ப்பை பதிவு செய்து வருகின்றனர்.

இச்சம்பவத்திற்கு கண்டனம் தெரிவித்து பிஜேபி மாநிலம் முழுவதும் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தியது.

<<<<>>>>

'புதிய குற்றவியல் சட்டங்கள்' குறித்த சிறப்பு கலந்துரையாடல் நிகழ்ச்சி சென்னை அகில இந்திய வானொலியில் இன்று ஒலிபரப்பாகிறது.

மாநில செய்திப் பிரிவு வழங்கும் இந்த நிகழ்ச்சியில் வழக்கறிஞர்கள் திரு. வசந்தகுமார், திருமதி. ஸ்மிருதி ஆனந்தன், ஊடகவியலாளர் சுமித்ரா ரத்னம் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

இன்று இரவு 8.30-மணிக்கு பிரதான அலைவரிசையில் ஒலிபரப்பாகவுள்ள இந்த நிகழ்ச்சியை மாநிலத்தில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் அஞ்சல் செய்யும்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

காஸாவில் இஸ்ரேல் படைகள் நடத்திய தாக்குதலில் 45 பாலஸ்தீனர்கள் உயிரிழந்ததாக அந்நாட்டு சுகாதாரத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

அண்டை நாடான பெனினுக்கு கச்சா எண்ணெய் கொண்டு செல்லும் குழாய்களை கிளர்ச்சியாளர்கள் சேதப்படுத்தியதாக நைஜீரியா உறுதிப்படுத்தியுள்ளது.

<<<<>>>>

பீகார் மாநிலம் ராய்கரில் உள்ள நாளந்தா பல்கலைக்கழகத்தில் புதிய வளாகம் அமைப்பதற்கான கட்டடப் பணிகள் தொடங்கப்பட்டதற்கு திபெத் ஆன்மிக தலைவர் தலாய் லாமா பாராட்டு தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

போதைப்பொருள் கடத்தல் வழக்கு தொடர்பாக 3 பேரை பஞ்சாப் காவல்துறை நேற்று கைது செய்தது.

<<<<>>>>

நீட் நுழைவுத் தேர்வு முறைகேடுகள் தொடர்பான புகாரின்பேரில் ஜார்கண்ட் மாநிலம் தியோகர் மாவட்டத்தைச் சேர்ந்த 6 பேரை பீகார் காவல்துறை கைது செய்துள்ளது.

<<<<>>>>

தூத்துக்குடி மாவட்டம் பேரூரணி சிறைச்சாலையில் குற்றவியல் நடைமுறைச் சட்டம் குறித்த கருத்தரங்கு நடைபெற்றது.

<<<<>>>>

திருவள்ளூர் மாவட்டத்தில் நடைபெற்ற மாற்றுத்திறனாளிகளுக்கான வேலைவாய்ப்பு முகாமில் 22 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை ஆட்சியர் திரு. பிரபு சங்கர் வழங்கினார்.

<<<<>>>>

## *விளையாட்டுச் செய்திகள்*

பிரிக்ஸ் விளையாட்டுப் போட்டிகளில் இந்தியா 2 தங்கப் பதக்கங்களை வென்றுள்ளது.

ரஷ்யாவின் **Kazan**–ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் குத்துச்சண்டைப் பிரிவில் இந்தியா இப்பதக்கங்களை கைப்பற்றியது.

இப்போட்டியில் இதுவரை இந்தியா, 3 தங்கம், 6 வெள்ளி, 20 வெண்கலப் பதக்கங்களுடன் பதக்கப்பட்டியலில் 8வது இடத்தில் உள்ளது.

<<<<>>>>

Lagos-ல் நடைபெற்று வரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Sreeja Akula இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளார்.

நேற்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு அரை இறுதி ஆட்டத்தில் அவர், இந்தியாவின் **Sutirtha Mukherji**-யை 11-8, 13-15, 11-9, 9-11, 12-10 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்றார்.

இன்று நடைபெறும் இறுதிப் போட்டியில் அவர், சீனாவின் **Yijie Ding**-ஐ எதிர்கொள்கிறார்.

இன்று நடைபெறும் மகளிர் இரட்டையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் இந்தியாவின் **Archana Girish Kamath – Srija Akula** இணை, இந்தியாவின் **Yashashwini Ghorpade – Diya Parag Chitale** இணையை எதிர்கொள்கிறது.

<<<<>>>>

உலக கோப்பை டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில், இந்தியா 50 ரன் வித்தியாசத்தில் பங்களாதேஷ் அணியை வென்றது.

Antigua-வில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் முதலில் ஆடிய இந்தியா, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 196 ரன் எடுத்தது.

இதையடுத்து, 197 ரன் என்ற வெற்றி இலக்குடன் களமிறங்கிய பங்களாதேஷ் அணி 20 ஓவரில் 8 விக்கெட் இழப்புக்கு 146 ரன் எடுத்தது.

இதன் மூலம் இந்தியா அரை இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

தற்போது நடைபெற்று வரும் ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான ஆட்டத்தில் முதலில் ஆடி வரும் ஆஃப்கனிஸ்தான் அணி, சற்றுமுன் வரை --- ஓவரில் ---- விக்கெட் இழப்புக்கு/இழப்பின்றி --- ரன் எடுத்துள்ளது.

கிங்ஸ்டனில் நடைபெற்று வரும் இப்போட்டியில் டாஸ் வென்ற ஆஸ்திரேலியா முதலில் பந்துவீச தீர்மானித்தது.

மற்றொரு போட்டியில் இங்கிலாந்து – அமெரிக்காவை எதிர்கொள்கிறது.

பிரிட்ஜ்டவுனில் நடைபெறும் இப்போட்டி இந்திய நேரப்படி இன்றிரவு 8 மணிக்கு தொடங்குகிறது.

<<<<>>>>

இந்தியா – தென்னாப்பிரிக்கா மகளிர் அணிகளுக்கு இடையேயான 3வது ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று நடைபெற உள்ளது.

பெங்களூருவில் நடைபெறும் இப்போட்டி பிற்பகல் மணி 1.30க்கு தொடங்குகிறது.

3 போட்டிகளைக் கொண்ட இத்தொடரில் இந்தியா 2 போட்டிகளை வென்று தொடரைக் கைப்பற்றியுள்ளது.

**<<<<The End>>>>**